## இந்தியப் பாதுகாப்பு இயக்கம்

**செய்தி மடல் – 5 (மே, 2011)**

பொய் வரதட்சணை வழக்குகளில் சிக்கவைக்கப்பட்டு நீதிகிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கும் அப்பாவி குடிமக்களை பாதுகாக்கும் உன்னதமான பணியில் இருக்கும் தமிழகத்திலுள்ள அனைத்து மாண்புமிகு மாவட்டத் தலைமை நீதிபதிகள், மாண்புமிகு நீதித்துறை நீதிமன்ற நடுவர்கள், மாண்புமிகு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், மாண்புமிகு அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர்கள் ஆகியோர்களுக்கு இந்த பொதுநலத் தகவல் மிகுந்த மரியாதையுடன் அனுப்பப்படுகிறது.

## நீதிமன்றங்கள் நிரபராதிகளை பாதுகாக்குமா?

இந்திய சட்டங்கள் சமூக விரோதிகளால் தவறாகப் பயன்படுத்தப்பட்டு அப்பாவிகளை துன்புறுத்தும் ஆயுதமாக பயன்படுத்தப்படும்போது நிரபராதிகளை பாதுகாக்கவேண்டிய தலையாய கடமை காவல்துறைக்கும், அதனைக் கண்காணிக்க வேண்டிய கடமை நீதித்துறைக்கும் இருக்கிறது.

கடவுளை நம்பாதவர்கள்கூட காவல்துறையை நம்புகிறார்கள், நீதிமன்றங்களை நீதி கிடைக்கும் கோயிலாக நம்பி மதித்து வருகிறார்கள். ஆனால் இந்திய "சட்ட தீவிரவாதம்" (**Legal Terrorism**) என்று உச்ச நீதிமன்றத்தால் பெயரிடப்பட்டு இப்போது நாடு முழுதும் புற்றுநோய் போல பரவியிருக்கும் பொய் வரதட்சணை வழக்குகள் இந்த நம்பிக்கைகளை முற்றிலுமாக தகர்த்தெறிந்துவிட்டன.

அப்பாவிகளுக்கெதிராக தவறான நோக்கில் ஒருவர் பொய்யான வரதட்சணைப் புகார் கொடுக்கும்போது அதனை பதிவு செய்யும் காவல்துறை முறையாக புலன்விசாரணை செய்து குற்றத்திற்கான சரியான ஆதாரங்கள் இருந்தால் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கை நடத்துவதற்கான முகாந்திரம் இருக்கிறது என்று அறிக்கை தயார் செய்து வழக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும். ஆனால் நடைமுறையில் இருக்கும் வழக்கமோ வேறுவிதமாக இருக்கிறது.

பொய் வரதட்சணைப் புகார் பதிவு செய்யப்பட்டவுடன் எந்தவிதமான புலன் விசாரணையும் செய்யாமல் கண்ணை மூடிக்கொண்டு அந்தப் புகாரை அப்படியே நகலாக்கி அதனையே இறுதி விசாரணை அறிக்கையாக நீதிமன்றத்திற்கு அனுப்பும் வழக்கம் பல காலமாக காவல்துறையில் இருந்துவருகிறது.

வரதட்சணை வழக்குகளைப் பொறுத்தவரை புலன் விசாரணை என்பது ஒரு மறக்கப்பட்ட நடைமுறை. இதன்விளைவாகப் பல அப்பாவிகள் குற்றவாளிகளாக சித்தரிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான பொய் வரதட்சணை வழக்குகள் குப்பையைப்போல காவல்துறையால் தினம் தினம் இந்திய நீதிமன்றங்களில் கொட்டப்படுகிறது என்று டில்லி உயர்நீதிமன்றம் தெளிவாகக் கூறியிருக்கிறது.

**Delhi High Court**

*(Savitri Devi Vs. Ramesh Chand, CRL. R 462/2002, Dt:19 May 2003)*

**"**Once a complaint is lodged under Sections 498AIPC whether there are **exaggerated allegations or there is no evidence**, it comes as an easy tool in the hands of Police and agencies like Crime Against Women Cell to hound them with the threat of arrest making them run here and there **… … … …Thousands of such complaints and cases are pending and are being lodged day in and day out**"

குற்ற வழக்குகளில் புலன்விசாரணை மூலம் உண்மையை அறிந்துகொள்ளாமல் தங்களிடம் சிக்கும் அப்பாவிகளை குற்றவாளி என சித்தரித்து பொய் வழக்குகளை நீதிமன்றத்தில் கொட்டி அப்பாவிகளை துன்புறுத்தும் வழக்கம் காவல்துறைக்கு புதிதான விஷயமல்ல. இந்திய சுதந்திரத்திற்கு முன்பான காலத்திலேயே புலன்விசாரணையில் கடமைதவறும் நடைமுறை காவல்துறையில் இருந்து வந்திருக்கிறது.

இந்திய சட்ட வரலாற்றை சற்றுக் கூர்ந்து நோக்கினால் இந்த உண்மை புலப்படும். "ஒருவர் மீது குற்றப் புகார் பதிவு செய்யப்படும்போது சரியான புலன் விசாரணை செய்து குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையாகவே குற்றம் புரிந்தாரா அல்லது புகார்தாரர் காழ்ப்புணர்ச்சி காரணமாக சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி பொய்யான புகார் அளித்துள்ளாரா என்பதை முறையாக விசாரணை செய்து உறுதிப்படுத்தாமல் கடமையை மறந்து அதிகாரம் தன்னிடம் இருக்கிறது என்ற எண்ணத்தில் மிகவும் வசதியாக மரத்தடி நிழலில் அமர்ந்துகொண்டு குற்றம்சாட்டப்பட்டுள்ள ஏழையின் கண்களில் மிளகாய்பொடியைத் தூவி துன்புறுத்தி குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்து நீதிபதியின் முன் குற்றவாளியாக நிறுத்தும் கொடிய வழக்கம் பலநூற்றாண்டுகளுக்கே முன்பே இந்தியாவில் இருந்திருக்கிறது." இந்த இந்திய சட்டநடைமுறையைப் பற்றி ஆங்கிலேய நீதிபதி தனது புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

**A History of the Criminal Law of England**

1883. Vol.1: Page 442, MacMillan & Co. London

*Author: Sir James Fitzjames Stephen, A Judge of the High Court of Justice, Queen's Bench Division*

During the discussions which took place on the Indian Code of Criminal Procedure in 1872 some observations were made on the reasons which occasionally lead **native police officers to apply torture to prisoners.** An experienced civil officer observed, **"There is a great deal of laziness in it. It is far pleasanter to sit comfortably in the shade rubbing red pepper into a poor devil's eyes than to go about in the sun hunting up evidence."** This was a new view to me, but I have no doubt of its truth.

இதுபோன்ற அநீதி இப்போதும் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கிறது. முன்னாள் தமிழக காவல்துறைத் தலைவரே தான் தலைவராக பணியாற்றிய காவல்துறையில் அப்பாவிகளுக்கு இதுபோன்று இழைக்கப்படும் அநீதியை நேரில் பார்த்து அந்த வேதனையான அனுபவத்தை தமிழக காவல்துறையின் மாத இதழில் தான் எழுதியுள்ள கட்டுரையில் விவரித்திருக்கிறார்.

"காவல் நிலையத்தில் பதிவாகும் குற்றவழக்குகளில் கடமை உணர்வுடன் சரியான புலன்விசாரணை செய்து ஆதாரங்களை திரட்டி வழக்கின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளாமல் தங்களிடம் வருகின்ற எல்லாப் புகார்களுக்கும் விசாரணையை முடித்து வழக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டதாகக் காட்டி தங்கள் கடனை கழித்துக் கொள்வதற்காக கையில் கிடைத்த ஒரு அப்பாவி ஏழைத் தொழிலாளியை பலியாடு போல பயன்படுத்தி அவரை குற்றவாளியாக சித்தரித்து 54 முறை சிறையில் தள்ளியிருக்கிறார்கள்" என்று தமிழக காவல்துறைத் தலைவர் எழுதியிருக்கிறார். பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு அவரால் இந்தக்கொடுமையைப் பற்றி எழுதத்தான் முடிந்தது. தான் பதவியிலிருந்தபோதே அந்த அப்பாவிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பதில் சொல்ல முடியவில்லையே! இது சட்டத்தின் குற்றமா? அல்லது சட்டத்தை செயல்படுத்துபவர்களின் குற்றமா?

**Tamilnadu Police Department**
**Criminal Investigation Department Review, 2007: Issue: IV**
***Criminal Justice System Precept and Practice***
***Tr. A.X.Alexander, IPS., (Retd. DGP)***

There was a burglary in 1997 … … … within three hours the thief was apprehended and the property was recovered. He was sent to the prison and subsequently detained under Act 14 of 1982. **He had 54 convictions.**

... ... ...After the release, the thief and his wife came to see us and I asked him why he had committed thefts so many times. **He replied that he was an assistant in masonry work and that he had committed petty felonies only and <u>not definitely the cases shown in his conviction records and the police had taken him whenever they could not fix an accused.</u>**

I perused his conviction records and most of the offenses for which he was punished were motorcycle thefts. **<u>From his looks I could guess that he did not know even to start a motorcycle. I confronted him why he had committed thefts of motorcycles. He replied that he had not committed theft of any motorcycle but whenever motorcycles were recovered in series he was fixed as the thief.</u>** I sent for the Inspector who booked him, to know from him whether the allegation of the thief was true. <u>The Inspector stood in silence for long and muttered that it was true and I told him that he has children and wished that he sinned no more</u>... ... ....

இதுபோன்று அப்பாவிகளுக்கு இந்தியாவில் பலகாலமாக இழைக்கப்பட்டுவரும் அநீதியைக் கண்ட மேலை நாடுகள் “புகார் பொய்யாக இருந்தாலும் எந்தவித ஆதாரமுமின்றி அப்பாவிகளை கைதுசெய்யும் நடைமுறை இந்தியாவில் இருப்பதாக” இந்தியாவிற்கு செல்ல நினைக்கும் தங்களது குடிமக்களை எச்சரிக்கை செய்துவருகின்றன!

**The University of California Education Abroad Program**
**International Students’ Handbook**
**Country: INDIA**
*(Source: <u>http://eap.ucop.edu/our_programs/countries/india/</u>)*

**“Since the police may arrest anyone** who is accused of committing a crime **<u>(even if the allegation is frivolous in nature</u>**), <u>the Indian criminal justice system is often used to escalate personal disagreements into criminal charges.</u> This practice has been increasingly exploited by dissatisfied business partners, contractors, estranged spouses, or other persons with whom the U.S. citizen has a disagreement, occasionally resulting in the jailing of U.S. citizens pending resolution of their disputes**”**

குற்ற வழக்குகளில் நிரபராதிகளை சிக்கவைத்து துன்புறுத்தும் கொடுஞ்செயல் இப்போது சர்வ சாதாரணமாக பொய் வரதட்சணை வழக்குகளில் மிகவும் அதிகமாக நடந்துகொண்டிருக்கிறது. ஏனென்றால் வரதட்சணை தடுப்புச் சட்டங்களை தவறாகப் பயன்படுத்தும் குற்றவாளிகளுக்குத் துணையாக பொய் வழக்குகளை உருவாக்கி அப்பாவிகளை துன்புறுத்தினால் அதிக பணம் கிடைக்கிறதாம்! மேலும் பொய் வரதட்சணை வழக்குகள் என்பது இந்தியாவில் பலருக்கும் லாபம் தரும் தொழிலாக இருப்பதாக டில்லி உயர்நீதிமன்றம் கூறியிருக்கிறது.

**IN THE HIGH COURT OF DELHI AT NEW DELHI**
*Date of Order: August 06, 2010*
*Crl. M.C. 722 of 2009*
*Amit Sharma ...Petitioner Versus State & Ors. ...Respondents*

4. **It is surprising that such FIRs are registered by the police when** neither complainant lives in Delhi nor the accused persons live in Delhi nor any part of alleged offence had taken place in Delhi. … … … **I consider that registration of this FIR is a sordid story of working culture of Delhi police.** It is this police which refuses to register FIRs in case of robberies, thefts and other heinous offences which take place on the roads of Delhi and when the complainant dare comes to police station for registration of FIR, he is made to run from one police station to another on the issue of jurisdiction itself, while the FIRs are registered when nothing happened in India and no investigation can be done by the police in India. **Why such FIRs are registered is obvious. It seems registration of FIRs has been made a profitable business by some police officials.**

பொய் வரதட்சணை வழக்குகள் லாபம் தரும் தொழிலாக இருப்பதால் கடமையை மறந்து நிரபராதிகளை பொய் வரதட்சணை குற்றவழக்குகளில் குற்றவாளியாக சித்தரித்து நீதிமன்றங்களுக்கு குற்ற அறிக்கை அனுப்பும் பல சம்பவங்கள் இன்றும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இதனால் கடைசியில் ஏழை எளிய அப்பாவி நிரபராதிகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இதுபோன்ற மனித உரிமை மீறல்கள் நடக்காமல் இருக்கவேண்டுமென்றால் காவல் தனது கடமை தவறினாலும் நீதித்துறை தலைநிமிர்ந்து நின்று அப்பாவிகளைக் காக்கவேண்டும்.

"*தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினாற் சுட்ட வடு.*"

என்ற திருவள்ளுவரின் கூற்றையே இப்போது பொய்வரதட்சணை வழக்குகள் பொய்யாக்கிவிட்டன. தீயினால் சுட்ட வடுவும் மறைந்துவிடும், நாவிலிருந்து வந்த கடுஞ்சொற்களால் ஏற்பட்ட வேதனைகள் கூட மறைந்துவிடும். ஆனால் நிரபராதியை பொய் வழக்கில் குற்றவாளியாக சிக்கவைத்து நீதிமன்றத்தில் அலையவிட்டு கடைசியில் நிரபராதி என்று விடுதலை செய்தாலும் அந்த நிரபராதி அடைந்த இன்னல்கள் என்றுமே ஆறாத ரணமாகத்தான் இருக்கும். அப்பாவிகளின் இந்த வேதனையை யாராலும் துடைக்க முடியாது என்று இந்திய உச்ச நீதிமன்றம் சமீபத்தில் ஒரு பொய் வரதட்சணை வழக்கில் அளித்த தீர்ப்பில் ஒழுங்கற்ற புலன் விசாரணை மூலம் நிரபராதிகளுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டு வேதனைப் பட்டிருக்கிறது.

**Supreme Court of India**
*Preeti Gupta & Another Vs. State of Jharkhand & Another,*
*Crl. Appeal No. 1512/2010, Dt: 23 August 2010*

**"The criminal trials lead to immense sufferings for all concerned. Even ultimate acquittal in the trial may also not be able to wipe out the deep scars of suffering of ignominy.** Unfortunately a large number of these complaints have not only flooded the courts but also have led to enormous social unrest affecting peace, harmony and happiness of the society..**"**

அதனால் பொய் வரதட்சணை வழக்குகள் எந்தவித விசாரணையுமின்றி காவல்துறையால் குப்பைகளாக நீதிமன்றத்தில் கொட்டப்படும்போது நிரபராதிகளை தேவையற்ற குற்ற வழக்குகளில் சிக்கவைத்து துன்புறுத்தாமல் பாதுகாக்க நீதிமன்றங்களால் மட்டும்தான் முடியும். மனமிருந்தால் மார்க்கமுண்டு! காவலுக்கும், நீதிக்கும் மனசாட்சியிருந்தால் அப்பாவிகளுக்கும் நீதியுண்டு!!